DECEMBER 2023 **U/ID 30616/ULA1A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

I. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் பத்திற்கு மட்டும் 30 சொற்களில் விடை தருக.

1. மனோன்மணியம் ஆசிரியர் பற்றி குறிப்பு வரைக.

2. மதுரையில் சமணர்களுக்கும் திருஞானசம்பந்தருக்கும் நடந்த வாதத்தினைத் தருக.

3. கவிமணி பொன்னும் மணியுங் கண்டு பின்னர் எதைக் காணமுடியவில்லை என்கிறார்?

4. பாரதியார் கண்ணனை எவ்வாறெல்லாம் பாவித்து பாடியுள்ளார்?

5. அழகின் சிரிப்பு எனும் நூலில் பாடப்பெற்றுள்ள உவமைகள் யாவை?

6. மூச்சுக் காற்றின் அனைகின்ற விளக்கு கண் – விளக்குக.

7. ஈரோடு தமிழன் சுட்டும் அரிசனக் குடி எத்தகையது?

8. வைரமுத்து வீரியம் மிக்க விதையாக யாரைச் சுட்டுகிறார்?

9. திருநாவுக்கரசர் சுட்டும் அகப்புறத்துன்பங்கள் யாவை?

10. கண்ணபிரானின் அழகு நலத்தை எழுதுக.

11. நந்திவர்மனிடம் தலைவி தூது விட்ட பொருட்கள் யாவை?

12. பாண்டிய மன்னனின் தலைவின் வெட்கம் எத்தகையது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

II. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.

13. கலைமகளுக்கு இரண்டு கண்களாக அமைந்த மொழிகளில் தமிழ் மொழியின் சிறப்புகள் பற்றி விவரி.

14. கவிமணி கோவிலில் எவ்வற்றைக் கண்டதாகப் பாடியுள்ளார் விளக்குக.

15. சேவகரால் படும் சிரமங்களைப் பாரதியார் சுட்டுவதை விவரிக்க.

16. பாரதிதாசன் இயற்கைக் கவிஞர் 'அழகின் சிரிப்பு' வழி நிறுவுக.

17. மு, மேத்தாவின் வெளிச்சம் வெளியே இல்லை கவிதையின் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

18. யசோதையானவள் பெற்ற பேரானந்தம் எத்தகையதாகக் குலசேகராழ்வார் கூறியவற்றைத் தந்துரைக்க.

19. நந்திவர்மனின் ஆட்சிச் சிறப்பைத்தந்துரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

III. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றிற்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.

20. கவிமணி கோவில் வழிப்பாட்டில் கோவிலில் எவ்வற்றைக் கண்டதாகவும் எதையெல்லாம் காணவில்லை என்கிறார்? விளக்குக.

21. பாரதியார் 'சேவகன்' எனும் தலைப்பில் எவற்றைச் சுட்டி வருகிறார்? விவரிக்க.

22. 'நிலத்தை ஜெயித்த விதை' எனும் கவிதையில் வைரமுத்து கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

23. குலசேகராழ்வார் தேவகியின் புலம்பல்களாகக் கூறியவற்றைத் தந்துரைக்க.

24. நந்திவர்மனின் வீரம் கொடை ஆகியவற்றைத் தொகுத்துரைக்க?